காஞ்சிபுரம் மாநகராட்சி ஆணையாளர் செயல்முறை உத்திரவு
முன்னிலை:- திரு.ம. செந்தில் முருகன், எம்.காம்.,

ந.க.எண்.235/2023/F1, நாள்.11.03.2024

பொருள் :- மனைப்பிரிவு – காஞ்சிபுரம் மாநகராட்சி – திருவீதிபள்ளம் கிராமம் சர்வே எண்.12/1B, 12/2, 13/1 இல் 2.02 ஏக்கர் பரப்பளவிலான குடியிருப்பு மனைப்பிரிவு வரைப்படம் தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியது – நகர் ஊரமைப்பு துறையின் திட்ட அனுமதி எண்.131/2022-ன்படி குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உத்திரவு வழங்குதல் – தொடர்பாக.

பார்வை :-
1. அரசாணை எண்.18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.04.02.2019.
2. அரசாணை எண்.81, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, [UD4(1)] நாள்.09.12.2020.
3. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை [UD4(1)] நாள்.16.07.2022.
4. பொது உபயோக இடத்திற்கான தாணப்பத்திரம் பதிவு எண்.6755/2022, நாள்.20.10.2022.
5. துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் ந.க.எண்.6JTFEYV2/2022/TCP, நாள்.28.12.2022.
6. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டி.பி2, நாள்.20.10.2022.
7. திருமதி.V. சுசீலா, V.I. Promoters அவர்களின் கடிதம் நாள்.04.01.2023.
8. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு கடிதம் நாள்.20.01.2023.
9. மாநகரப் பொறியாளர் குறிப்பு நாள்.10.01.2024.
10. துறைத் தலைவர், சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியல் துறை, ஸ்ரீ சந்திர சேகரேந்திர சரஸ்வதி விஸ்வா மஹா வித்யாலயா அவர்களின் 24.01.2024ம் தேதிய ஆய்வு சான்று.
11. காஞ்சிபுரம் மாமன்ற தீர்மான எண்.691, நாள்.19.02.2024.
12. இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு நாள்.01.03.2024.
13. வைப்புத் தொகை, மனைப்பிரிவு பராமரிப்பு, கால்வாய் அமைக்க கூடுதல் கட்டணங்கள் ரசீது எண்கள்.9956, 9957/29.02.2024, 10045/01.03.2024.

காஞ்சிபுரம் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட திருவீதிபள்ளம் கிராமம் சர்வே எண்.12/1B, 12/2, 13/1 இல் 2.02 ஏக்கர் பரப்பளவில் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு, துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம் அவர்களின் கடிதத்தின்படி மனைப்பிரிவில் அமையும் சாலை, பொது உபயோகப் பகுதியினை உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்ய சாலை அமைப்பு வரைபடம் பெறப்பட்டது.

அதனைத் தொடர்ந்து, பார்வை 1, 2, 3 இல் கண்டுள்ள அரசாணைகளின்படி, பார்வை 4 ல் கண்டுள்ளவாறு மாநகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டிய சாலைகள் பொது உபயோக இடம் மற்றும் மின்வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்ட இடம் தானப்பத்திரம் ஆவண எண்.6755/2022,

நாள்.20.10.2022–ன்படி மாநகராட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. பார்வை 5 ல் கண்டுள்ளவாறு மேற்படி மனைப்பிரிவு சாலை, பொது உபயோக இடத்தினை மாநகராட்சி பராமரிப்பிற்கு ஏற்று பார்வை 10 இல் கண்டுள்ளவாறு காஞ்சிபுரம் மாமன்ற தீர்மான எண்.691, நாள்.19.02.2024ல் மன்றம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதனைத் தொடர்ந்து பார்வை 4ல் கண்டுள்ள துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களால் இம்மனைப் பிரிவிற்கு திட்ட அனுமதி வழங்கி காஞ்சிபுரம் உள்ளூர் திட்டக் குழுமம் திட்ட அனுமதி எண்.131/2022 என எண்ணிடப்பட்டு தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேற்படி மனைப்பிரிவில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தி பணிகள் குறித்து பார்வை 8 இல் கண்டுள்ள மாநகராட்சி பொறியாளர் அவர்களின் 10.01.2024 தேதிய குறிப்பில் சாலைகள், மழைநீர் வடிகால்வாய், குடிநீர் பகிர்மான குழாய் அமைப்பு, தெரு மின்விளக்குகள் போன்றவை மனைப்பிரிவு உரிமையாளரால் முறையாக அமைக்கப்பட்டுள்ளதாக நகராட்சி பொறியாளர் குறிப்பு வழங்கியுள்ளார்.

மேற்படி அரசாணை எண்.141, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள்.16.07.2022 ன் படியும் பார்வை 6 ல் கண்டுள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் சுற்றறிக்கை ந.க.எண்.12843/2022/டிபி2, நாள்.20.10.2022 வழிகாட்டு நடைமுறை எண்.5, 6, 7–ன் படி இப்பணிகளை மனைப்பிரிவு உரிமையாளரால் மேற்கொள்ளப்படும்பட்சத்தில் மூன்றாம் நபர் வாயிலாக ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் ஸ்ரீ சந்திர சேகரேந்திர விஸ்வா மஹா வித்யாலயா நிகர்நிலை பல்கலை கழகத்தின் மூன்றாம் நபர் ஆய்வுக்குறித்த சான்று அறிக்கை மற்றும் சான்றுடன் சமர்ப்பிக்க இவ்வலுவலக கடிதம் மூலம் தெரிவிக்கப்பட்டதன்படி பார்வை 10 ல் கண்டுள்ள ஸ்ரீ சந்திர சேகரேந்திர விஸ்வா மஹா வித்யாலயா நிகர்நிலை பல்கலை கழகத்தின் 24.01.2024 ம் தேதிய சான்று பெறப்பட்டுள்ளது.

மேற்படி மனைகளுக்காக செலுத்தப்பட வேண்டிய நன்னிலை வரி கட்டணம் ரூ.14,700/–, நகர் ஊரமைப்புத் துறை வளர்ச்சி கட்டணம் ரூ.41,000/– திறந்தவெளி கட்டணம் ரூ.14,31,519 மற்றும் கூராய்வு கட்டணம் ரூ.12,267/– ஆகிய கட்டணங்கள் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் மனுதாரரால் செலுத்தப்பட்டு நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர் அவர்களின் உத்திரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் மனைப்பிரிவு அனுமதிக்கு செலுத்தப்பட வேண்டிய கட்டணம் குறித்து பார்வை 11 ல் கண்டுள்ள அறிவிப்பின் மூலம் தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் மனைப்பிரிவு பராமரிப்பு பணிகளுக்கான வைப்புத் தொகையாக ரூ,1,00,000/– சலான் எண்.9956, நாள்.29.02.2024ன் மூலமாகவும், மனைப்பிரிவு உட்பிரிவு கட்டணமாக ரூ.1,56,400/– சலான் எண்.9957, நாள்.29.02.2024ல் மற்றும் கால்வாய் அமைக்க கூடுதல் கட்டணமாக ரூ.3,30,739/– சலான் எண்.10045, நாள்.01.03.2024ல் இவ்வலுவலக கரூவூலத்தில் செலுத்தப்பட்டு மனைப்பிரிவு உரிமையாளரால் அதன் ரசீது நகல் இணைத்து விண்ணப்பிக்கப்பட்டுள்ளது. எனவே கீழ்குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுடன் குடியிருப்பு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் வழங்கப்படுகிறது.

1. நகர் ஊரமைப்பு துறை உதவி இயக்குநர், உறுப்பினர் செயலர் காஞ்சிபுரம் அவர்களின் கடிதம் SWP/DTCP/Kanchipuram/Layout No.131/2022 நாள்.28.12.2022–ன்படி மனைப்பிரிவு அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்.

2. இந்த அனுமதிக்குட்பட்ட இடத்தில் அல்லது எல்லையின் விஸ்தீரன எல்லைக்குள் வழக்கு ஏதேனும் இருப்பது தெரிய வந்தால் அதற்கு உட்படுத்தி இந்த அனுமதி உத்திரவு ரத்து செய்யப்படும்.

3. அரசாணை எண்.141, வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை (UD4) நாள்.10.02.2020ல் தெரிவித்துள்ளவாறு சாலை மற்றும் மழைநீர் வடிகால் வசதி போன்ற அடிப்படை வசதிகளை ஐந்து வருடங்கள் அல்லது 60 சதவிகித மனைகள் அபிவிருத்தியடைந்த பின் இவற்றில் எது அதிக காலமோ அதுவரை முறையாக பராமரிக்கும் பொறுப்பு தங்களை சார்ந்ததாகும்.

4. துணை இயக்குநர்(பொ), மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம், காஞ்சிபுரம் அவர்களால் திட்ட அனுமதி வழங்கப்பட்ட இம்மனைப்பிரிவிற்கு வரைப்படத்தில் குறிப்பிட்டுள்ள 49 குடியிருப்பு மனைகளுக்கும் வருவாய் பிரிவு மூலம் காலிமனை வரிவிதிப்பு செய்யப்பட்டு அதன் விவரம் அலுவலகத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

ஆணையாளர், 11/3/24
காஞ்சிபுரம் மாநகராட்சி

11/3

இணைப்பு– (1) மனைப்பிரிவு வரைப்படம், (2) மனைப்பிரிவு நிபந்தனைகள்.

நகல்:–

திருமதி.V. சுசீலா,
க/பெ வள்ளிவிநாயகம்,
V.I. Promoters,
சண்முகா நகர் (மாமல்லன் நகர்),
காஞ்சிபுரம்.

நகல்:– மாநகர திட்டமிடுநர், காஞ்சிபுரம் மாநகராட்சி.

நகல்:– மாநகர பொறியாளர், காஞ்சிபுரம் மாநகராட்சி–சொத்து பதிவேடுகளில் பதிய மற்றும் பராமரிக்க.

நகல்:– உதவி வருவாய் அலுவலர்(பொ), காலி மனை வரி விதிப்பு செய்து தொடர்ந்து வரி வசூல் செய்ய.

நகல்:– சார் பதிவாளர், காஞ்சிபுரம் சார்பதிவாளர் அலுவலகம் பத்திர பதிவுகளுக்காக.